www.ecourtsindia.com



IN THE COURT OF I ADDITIONAL SPECIAL JUDGE,
UNDER NDPS ACT, CHENNAI-104.
(Chapter XXIII code of Criminal Procedure)

**C.C. NO.375/2023**

DEPOSITION OF WITNESS FOR P.W.1

NAME : திருமதி.மீனா

FATHER/HUSBAND/NAME : Tr.Rajesh

OCCUPATION : SI of Police

AGE : 37

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date: 06.08.2024.

**முதல் விசாரணை—**

நான் தற்போது சென்னை பெருநகர காவல் கீழ்ப்பாக்கம் காவல் மாவட்டத்தில் நுண்ணறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 29.8.2022 அன்று நான் ஜி5 தலைமை செயலாக குடியிருப்பு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலி இடருந்த போது காலை 9.35 மணிக்கு ரகசிய தகவலாளி என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தேவகி என்ற நபர் திடீர் நகர் மாதா கோயில் பகுதியில் கஞ்சா எனும் போதை பொருளை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதாக கூறினார். அவர் கூறிய தகவலை எழுத்து பூர்வமாக பதிவு செய்து 9.40 மணிக்கு காவல் ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். மேற்படி தகவலினை பொதுநாட்குறிப்பிலும் பதிவு செய்தேன். ஆய்வாளரிடம் அனுமதியும் பெற்றேன். தகவல் அ.த.சா.ஆ.1. பின்னர் 9.45 மணிக்கு என்னுடன் தேன்மொழி காவலர், திருநாவுக்கரசு என்ற காவலருடன் வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் அரசு வாகனத்தில் மேற்படி சம்பவ இடத்திற்கு 10 மணிக்கு சென்றோம். அந்த இடத்தில் ஒரு பெண் நின்று ஏதோ விற்பனை செய்துகொண்டிருந்தார். கூட்டமாக நின்றிருந்தவர்கள் அவரிடம் ஏதோ கேட்டிருந்தனர். போலிசாராகிய எங்களை பார்த்ததும் அங்கிருந்தவர்கள்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-1.pdf

ஓடிவிட்டனர். அந்த பெண்மணியும் எங்களைப்பார்த்ததும் ஓட எத்தனித்தார். நாங்கள் அவரை மடக்கி பிடித்தோம். எங்களை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டோம். அவரிடம் பெயர் விலாசம் ஆகியவற்றை தெரிந்து கொண்டோம். அவர் தனது பெயர் தேவகி க/பெ பஞ்சா என்றும், 60, திடீர் நகர், புரசைவாக்கம், சென்னை என்றும் தெரிவித்தார். அந்த பெண்மனி சொன்ன முகவரியும் தகவலாளி சொன்ன விவரங்களும் சரியாக இருந்தது. பின்னர் மேற்படி பெண்ணிடம் எங்களுக்கு வந்த தகவலை தெரிவித்தோம் அவரை சோதனையிட வேண்டும் என்று கூறினோம். அவ்வாறு சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்துச்சென்று சோதனையிட கோர உரிமை உள்ளது என்று தெரிவித்தோம், அதற்கு அவ்வாறு அழைத்துச்செல்ல வேண்டாம், உதவி ஆய்வாளராகிய தாங்களே என்னை சோதனை செய்யலாம் என்று கூறினார். சோதனை அறிவிப்பு 10.30 மணிக்கு பதிவு செய்தேன். அதில் நான் மற்றும் என்னுடன் வந்த காவலர் சாட்சிகளும், எதிரியும் கையொப்பம் இட்டோம். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால் காவலர் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சோதனை அறிவிப்பு அ.த.சா.ஆ.2. பின்னர் எதிரியை சோதனை செய்த போது அவர் கையில் வைத்திருந்த கருப்பு நிற பிளாஸ்டிக் பேக்கை வாங்கி திறந்து பார்த்த போது அதில் கஞ்சா காணப்பட்டது. அதை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதன் எடை 1.300 கிகி எடை காணப்பட்டது. அதிலிருந்து 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்கள் மாதிரிக்காக தனியாக எடுத்து கட்டி, சீல் வைத்து விவர லேபிள் எழுதி ஒட்டி அதற்கு எஸ்1, எஸ்2 என குறியீடு செய்தேன். அதில் நான் மற்றும் காவலர் சாட்சிகள் கையொப்பம் இட்டோம். எதிரியிடமும் கையொப்பம் பெறப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் எஸ்1, எஸ்2 என குறியீடு செய்யப்பட்ட கஞ்சாதான் அன்று என்னால் மாதிரிக்கு எடுக்கப்பட்டது ஆகும், அது **சா.பொ.1 மற்றும் சா.பொ.2**. மீதமிருந்த கஞ்சாவை காக்கி நிற கவரில்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-1.pdf

வைத்து நூல் வைத்து கட்டி, சீல் வைத்து விவர லேபிள் எழுதி பி1 என குறியீடு செய்து, அதில் நானும், காவலர் சாட்சிகளும் கையொப்பம் இட்டோம். எதிரியிடமும் கையொப்பம் பெறப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் பி1 என குறியீடு செய்யப்பட்டதுதான் மொத்த கஞ்சாவாகும், அது **சா.பொ.3**. பின்னர் 10.50 மணி முதல் 11.30 மணி வரை போதை பொருளை மகசரில் சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி மகசரில் நானும், காவலர் சாட்சிகளும் கையொப்பம் பெற்றோம். பின்னர் எதிரியும் கையொப்பம் செயதார். மகசர் அ.த.சா.ஆ.3. பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் 12.00 மணி முதல் 12.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அதை சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 13.00 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்தேன். கைது அறிக்கையும் தயார் செய்து அதில் நான், காவலர் சாட்சிகள், எதிரி ஆகியோர் கையொப்பம் செய்தேன். கைது அறிக்கை **அ.த.சா.ஆ.4.** பின்னர் எதிரியை திரேக சோதனை செய்து ஆய்வு நமூனா தயார் செய்யப்பட்டது,,அது **அ.த.சா.ஆ.5**. பின்னர் 13.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து தனியறிக்கையை ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். தனியறிக்கை **அ.த.சா.ஆ.6**. ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை -இல்லை.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com